*கவனிக்க.- 2017.06.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2024 - 2017 ජූනි මස 16 වැනි සිකුරාදා - 2017.06.16
*2024 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1042 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1044 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1050 |
| ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் | 1042 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) அரவிந்த் குமார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, யூன் மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) பந்துல லால் பண்டாரிகொட மன்றம் ( கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, யூன் மாதம் 09ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, யூலை மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, யூன் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*1041-B 81179-5403 (2017/06)*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**
**பெறுகை அறிவித்தல்**

**புத்தளம் வழித்தடம் மற்றும் களனி வெலி வழித்தடம் ஆகியவற்றிலுள்ள பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பயணிகள் பெட்டிகள் மற்றும் சாமான்பெட்டிகளை அகற்றல்**
SRS/ F /7238

புத்தளம் வழித்தடம் மற்றும் களனி வெலி ஆகியவற்றிலுள்ள பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பயணிகள் பெட்டிகள் மற்றும் சமான் பெட்டிகளை அகற்றுவதற்காக இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக்குழுத் ( உயர் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார்.

அமைவிடங்கள் பின்வருமாறு.-

| | | |
|---|---|---|
| 1. புத்தளம் வழித்தடம் | - | பாலவி தளம் |
| 2. புத்தளம் வழித்தடம் | - | நாத்தண்டிய தளம் |
| 3. புத்தளம் வழித்தடம் | - | கொச்சிக்கடை தளம் |
| 4. புத்தளம் வழித்தடம் | - | காக்காப்பள்ளி தளம் |
| 5. புத்தளம் வழித்தடம் | - | பங்கதெனிய தளம் |
| 6. புத்தளம் வழித்தடம் | - | மதுரங்குளி தளம் |
| 7. புத்தளம் வழித்தடம் | - | புத்தளம் தளம் |
| 8. புத்தளம் வழித்தடம் | - | லுணுவில தளம் |
| 9. புத்தளம் வழித்தடம் | - | மாதம்பை தளம் |
| 10. கே. வி. வழித்தடம் | - | மருதானை தளம் |
| 11. கே. வி. வழித்தடம் | - | தெமட்டகொடை தளம் |
| 12. கே. வி. வழித்தடம் | - | மாளிகாவத்த தளம் |

2. 2017.06.22 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலை மனுக்கள் மூடப்படும்.

3. 10,000 ரூபாவை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாகச் செலுத்திய பின்னர் 2017.06.21 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையும், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் அவற்றை மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவே பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்/ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

6. புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம். மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் முறைகளில் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள் : 2438078 அல்லது 2436818
தொலை நகல் இலக்கம் : 2432044
மின்னஞ்சல் : srs. slr @ gmail. com

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறியீட்டு இல. SRS/ F 7238

6 – 535

---

# ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும்

## பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனை - 2018

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பின்னைய காலப்பகுதிக்கும் கள்ளுத் தவறணை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் செல்லுபடியாகும் சகல மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் பொது மதுபான வரி நிபந்தனைகளுக்குமிணங்க 2018 ஆம் ஆண்டுக்கு மதுபான (கள்ளு) சில்லறை விற்பனைக்கான வரப்பிரசாதங்களை விலைக்கு வாங்குவதற்காக பேருவளை பிரதேச செயலாளராகிய என்னால் 2017ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் நாட்டின் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் தயாரிக்கப்படுவதோடு –

(அ) கேள்விப்பத்திர வைப்புப்பணமாக எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய கேள்விப்பத்திர பணம் வைப்புச்செய்து அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டையும் (ரசீத்) ;

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணி, பூமி ஆகிய நிரந்தர சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரதாரியின் வருமானம் பற்றிய சான்றிதழ்களையும் முன்வைக்க வேண்டும். கேள்விப்பத்திரமும் வருமானச் சான்றிதழும் முன்வைப்பது சம்பந்தமாக மேற்குறிக்கப்பட்ட மதுபான விற்பனைக்கான நிபந்தனைகள் முறையாக பேணப்பட வேண்டுமென்பதை கேள்விப்பத்திரதாரர்களுக்கு ஆணித்தரமாக வலியுறுத்தப்படுகிறது. கேள்விப்பத்திரம் பூர்த்தி செய்யப்படும்போது கேள்விப்பத்திரதாரர் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தல் வேண்டும்:-

(1) கேள்விப்பத்திரம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும்போது அதிலே குறிக்கப்பட்டுள்ள பணத்தினை இலக்கத்திலும் மட்டுமல்லாது எழுத்திலும் குறிக்கப்படல் வேண்டும்.

(2) பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களில் குறிக்கப்பட்ட சாட்சியாளரின் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) கோடிட்டு வெட்டப்பட்டுச் செய்யப்படும் சகல திருத்தங்களும் கேள்விப்பத்திரதாரரின் குறுகிய கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு பூர்த்தி செய்யப்படாத கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரம் –

(அ) கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்புச் செய்யப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டும் (ரசீத்) ;

(ஆ) வருமானச் சான்றிதழோடும், கடித உறையில் இட்டு முத்திரை (சீல்) பதிக்கப்பட வேண்டும். அக்கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் 'மதுபான விற்பனை நிலைய இலக்கமும் பெயரும்' குறிப்பிடப்பட்டு பேருவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் கேள்விப்பத்திரம் கோரும் கடைசி நேரத்திற்கு முன்னதாகவே இடப்பட வேண்டும். அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

4. ஒவ்வொரு கள்ளுத் தவறணைக்காகவும் பெற்றுக்கொள்ளும் இறுதி நேரம் கீழே மேலதிகமாக இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட நேரத்தில் அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பேருவளைப் பிரதேச செயலகத்தில் சமுகமளித்தல் வேண்டும்.

5. சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பிய கேள்விப்பத்திரதாரர் ''தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்'' எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பின் அத்தினம் பி. ப. 2.30 மணிக்கு முன் பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் ஒரு தொகைப் பணம் முற்பணமாக பேருவளை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்து கீழ்க்காணும் மதுபானம் சேகரித்து விற்பனை செய்வது சம்பந்தமான நிபந்தனைகளுக்கு கைச்சாத்திடல் வேண்டும். இக்கட்டுப்பணமானது பணமாக அல்லது 'வங்கியில் செலுத்தப்படத்தக்க' எனக் குறிக்கப்பட்டு காசோலை மூலமாகவோ, மக்கள் வங்கி மூலமாகவோ அல்லது "பாதுகாப்புடைய காசோலை" என்ற பெயரில் செலுத்தப்பட்ட காசோலை மூலமாகவோ அல்லது அவ்வங்கியின் பெயரில் செலுத்தப்பட்ட காசோலையாகவோ இருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத மதுபான விற்பனை நிலையம் மீள் விற்பனைக்காக 2017.09.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரம் இவ்வர்த்தமானிக்கு அமைவாக முன்வைக்கப்படல் வேண்டும்.

7. மேலதிக விபரங்கள் தேவைப்படின் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. ஜீ. டீ. சதுர மல்ராஜ்,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2017, மே 17.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | கிராமம் | மதுபான நிலையம் திறக்கப்படும் நேரம் | மதுபான நிலையம் மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதித் திகதி | மீண்டும் விற்பனை செய்யும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பேருவளை பிரதேச சபைப் பிரிவு | அளுத்கம உபபிரிவு எல்லைக்குள் | மு. ப. 11.00- பி. ப. 5.00 | பி. ப. 2.00 மற்றும் இரவு 8.00 | 2,000 | 2017, ஒகத்து 25 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 2017, செத்தெம்பர் 19 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை |

**குறிப்பு** : 2018 ஆம் ஆண்டிற்கு தற்போது மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடத்தை மீண்டும் பெற்றுக்கொள்வது உறுதி செய்யப்படமாட்டாது. புதிய இடத்தில் மதுபான விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்படுமாயின் அது சம்பந்தமாக பேருவளை பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6-427

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைய மேற்கொள்ளப்படும் அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : நேச்சர் அக்ரோ ஃ பாம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 121286
பதிவு முகவரி : இல.54, அன்டர்சன் வீதி, தெஹிவளை

6-417

## பகிரங்க அறிவித்தல்

யால ஹொலிடே ரிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

கம்பனியின் செயலாளர் மாற்றம்

கம்பனியின் செயலாளரான கீல்ஸ் கன்சல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்துக்குப் பதிலாக, 2017, மே மாதம் 15 ஆம் திகதி அமுலுக்கு வருகின்ற வகையில் திரு. எச்.ஏ. வெஹல்லே அவர்கள் கம்பனியின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

பதிவு செய்யப்பட்ட முகவரியின் மாற்றம்

2017, மே மாதம் 05 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் ஏற்கனவே இருந்த கம்பனியின் முகவரியான “இல.117, சேர் சித்தம்லம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 2” என்ற முகவரியிலிருந்து தற்போது இல. 25/1, க்ரீன் பாத், கொஹுவளை என்ற முகவரிக்கு கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி மாற்றப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

சபையின் கட்டளைப்படி,

கீல்ஸ் கன்சல்டன்ட் (பிறைவேட்) லிமிட்டட்.

6-429

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் அடிப்படையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2017, சித்திரை 07 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர் : தீம் பெக் ஒ(f)வீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 121551
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 37, பகத்தல வீதி, கொழும்பு 3.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோ-சேர்வ்(பிறைவெட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

6- 431

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் அடிப்படையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2017, பங்குனி 07 ஆந்திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர் : கெஸ்டெட்னர் கே.பீ.ஓ. (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 120584
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 37, பகத்தல வீதி, கொழும்பு 3.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோ - சேர்வ்(பிறைவெட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்.

6-432

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழான பகிரங்க அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : அல்டிமேட் ஸ்போர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இல. : பீவீ 100336
கம்பனியின் முகவரி : இல.04, ராஜவத்த டெரஸ் (சீபல் அவெனியூக்குப் பின்னால்), கொழும்பு 5.

ஆர்.என்.ஏ. நாணயக்கார,
கம்பனிச் செயலாளர்.

2017, மே 22.

6-442

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : மல்வத்த லெசர் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இல. : பீவீ 121938
பதிவு முகவரி : இல.280, டாம் வீதி, கொழும்பு 12.

பணிப்பாளர் சபை,
மல்வத்தை லெசர் (பிறைவேட்) லிமிட்டட்.

6-443

---

## ஸ்ரான்லி லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

(அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைத்தலில் உள்ளது)

**கம்பனியின் பதிவு இல. பிவி 75570**

## கம்பனியின் இறுதி பொதுக்கூட்டத்திற்கும் கலைத்தலுக்குமான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் பிரிவிற்கமைவாக மேற்படி கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி பி.ப. 3.00 மணியளவில் ஸ்ரான்லி லங்கா ( பிறைவேட்) லிமிட்டட், இலக்கம் 153, 6-2/6, ரில்லியம் றெஸிடன்ஸீஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08 என்ற இடத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தலுக்கான கணக்கு விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அத்துடன்,

1. கலைத்தல் அலுவல்கள் நடைபெறும் விதம், மற்றும்,
2. கம்பனியின் சொத்துக்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை பங்குதாரர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட முறை , மற்றும்
3. இவை பற்றிய மேலதிக விளக்கம் ஏதேனும் தேவைப்படின், அவை பற்றிய விளக்கங்களும் அளிக்கப்படும்.

ஷிறில் சந்திரரத்ன,
ஸ்ரான்லி லங்கா (பிறைவேட்) லிமிட்டட்,
நியமிக்கப்பட்ட கலைப்பாளர்.

2017, மே 29.

6-486

---

## வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பிற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) கீழ் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : பெடிவே சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கூட்டிணைப்புக்கான இல. : பீவீ 122310
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல.143, போதிராஜா மாவத்தை, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை.

கம்பனிச் செயலாளர்.

6-493

**கம்பனியின் பெயர் மாற்றத்திற்கான அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.-

கம்பனியின் முன்னைய பெயர் : என்டீஓ (NDO) லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 831
கம்பனியின் பதிவு செய்த முகவரி : இல.117, சேர் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : மெக் இன்டர்நெஷனல் ப்ரேட் (பிறைவேட்) லிமிட்டட்.

சபையின் கட்டளைப்படி,

கீல்ஸ் கன்சல்டன்ட்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

6- 513

---

**கம்பனியொன்றில் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல் இத்தால் தருகின்றோம்.-

கம்பனியின் முன்னைய பெயர் : பொகவந்தலாவ டீ மார்கட்டிங் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 12485
கம்பனியின் பதிவு முகவரி : 2 ஆம் மாடி, அன்ரூஸ் கட்டிடம், 130, நாவல பாதை, நாராஹேன்பிட்ட, கொழும்பு5
கம்பனியின் புதிய பெயர் : பொகவந்தலாவ டீ சிலோன் (பிறைவேட்) லிமிட்டட்.

பொகவந்தலாவ டீ சிலோன் (பீவீடி)
எல்டீடி என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பீ டபிள்யூ கோப்பரேட்
செக்ரட்டேரியல் ( பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2017, மே 30.

6- 550

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் கூட்டிணைத்தல் பற்றிய பொது அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : இண்டியன் பைன் புட் டிரேஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம்: பீவீ 122623
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.05.26
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 27/1, பெப்பிலியான வீதி, நெதிமாலை, தெஹிவளை.

டபிள்யூ . எஸ். வீரமன்,
செயலாளர்.

6- 576

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ட்ரான்சிடி டுவென்டிபோ (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம்: பீவீ 120696
பதிவு முகவரி : ட்ரான்ஸ்போடேஷன் இஞ்சினியரிங் டிவிசன் டிபார்ட்மண்ட் ஒப் சிவில் இஞ்சினியரிங், மொரட்டுவை பல்கலைக்கழகம், கடுபெத்தை, மொரட்டுவை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.03.09

பணிப்பாளர் சபை.

6- 577

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர் : டீ.ஈ.என். லங்கா குரூப் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம்: பீவீ 122617
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.05.26
பதிவு அலுவலகம் : இல. 90, ஹில் ஸ்ரீட் , தெஹிவளை

பினான்சியல் அன்ட் பிசினஸ்
அசோசியேட்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

6- 599

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஸ்ரீ கிரீன் டெக் எகோ (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட இலக்கம் : பீவீ 111807
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 33, தெஹிவளை வீதி, பெபிலியான, பொரலஸ்கமுவ.

எம்.சி.எம்.நவாஸ்,
கம்பனிச் செயலாளர்.

6-613

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஏ.ஏ.ஆர்.சீ புட் எக்ஸ்போர்ட் அன்ட் இம்போட் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட இலக்கம் : பீவீ 121262
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 36, துவவத்தே, மாபோல, வத்தளை

எம்.சி.எம்.நவாஸ்,
கம்பனிச் செயலாளர்.

6-614

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஏஷியன் எக்ஸோடிகா லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட இலக்கம் : பீவீ 115022
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 35, டொரின்டன் அவனியூ, கொழும்பு- 07

எம்.சி.எம்.நவாஸ்,
கம்பனிச் செயலாளர்.

6-615

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : எலிகண்ட் ஹோம் லேண்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 122263
பதிவு முகவரி : இல. 19, எண்டசன் குறாப், பங்சாலிய, அஹங்கம
கூட்டிணைப்பட்ட திகதி : 2017.05.15

கம்பனிச் செயலாளர்கள்.

6-654

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி 2017.05.08 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது-

கம்பனியின் பெயர் : ஓசென்பம் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 122121
பதிவு முகவரி : இல. 47, அலெக்சாண்ட்ரா பிளேஸ், கொழும்பு 7

கோர்ப்ரேட் அட்வைசரி
சேர்விசஸ் ( பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

6-685

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி 2017.05.12 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது-

கம்பனியின் பெயர் : இஸ்லே ஒப் ஜிலடோ (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 122203
பதிவு முகவரி : இல. 615/15, ராஜகிரிய கார்டன்ஸ், ராஜகிரிய

கோர்ப்ரேட் அட்வைசரி
சேர்விசஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

6-686

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 252, புத்தளம் வீதி, குருநாகலில் வசித்து வரும் 647670245V என்ற இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டையுடையவராகிய அந்திரமடகே சுபானி பிரயன்திகா முனசிங்கா ஆகிய நான் , பிரசித்த நொத்தாரிசு D.R. நாகசேன என்பவரால் 2010.10.15ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2866 என்ற இலக்கத்தையுடையதும் கண்டி ஹரஸ்ஸகல , இரண்டாம் தெருவில் , இல. 71/30 இல் வசிக்கும் அந்தீரமடகே சுதம்மி லக்ஷிகா தர்மசேன என்ற முகவரியில் வசிப்பவரும் 726921172V தேசிய அடையாள அட்டை உடையவருமானவருக்கு வழங்கப்பட்ட செயற்பாட்டிலுள்ள அற்றோணித் தத்துவம் செயல்வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் இதன் பின்னர் அவ்வாறான அற்றோணித்தத்துவத்தின் கீழ் அவரினால் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதனது பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

சுபானி பிரயன்திகா முனசிங்கா.

6-425

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

திருகோணமலை, சிறிமாபுர, முதலாம் கொலனி, 39 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும் தற்போது ஐக்கிய இராச்சியம் , இலண்டன், மிடில்செக்ஸ், சவுத்ஹோம், லேடி மார்க்ரெட் வீதி, 131ஆம் இலக்கத்தில் வசிப்பவருமாகிய ஜானக ஹேவா விதாரன் ஆகிய நான், ஐக்கிய இரச்சியம் middx UBI IND The Broadway, Southall 223 என்ற முகவரியைச்சேர்ந்த சிறிஹரன்ஸ் சொலிசிட்டர்களால் (ஏ. சிறிஹரன்) அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2002.08.27 என்ற திகதியுடையதும் 2002.10.18 ஆம்திகதி 9899ஆம் பதிவில் 113 ஆம் பக்கத்தில் 245 ஆம் தொகுதியில் பதிவாளர் நாயகத்தினால் பேணப்படும் எழுத்துமூல அதிகாரிகளின் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டதும் திருகோணமலை சிறிமாபுர 39 ஆம் இலக்கத்தில் வசிக்கும் கிரிகிகாணகே நந்தசீலி என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்துள்ளேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் வழங்குகின்றேன்.

ஜானக ஹேவா விதாரன.

2017, மே 18.

6-436

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 189/25/D, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, தெமட்டகொடை, கொழும்பு 09 இல் வசிக்கும் அபூஸாலி மொஹமட் சரூக் ஆகிய நான், 189/25/D, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, தெமட்டகொடை, கொழும்பு 09 இல் வசிக்கும் மொஹமட் சரூக் பாத்திமா புஜ்ரா அவர்களுக்கு முகம்மது சரீபு முகம்மது ஸாஹிர் பிரசித்த நொத்தாரிசு அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கிய 2012.12.04 ஆந் திகதியிட்ட 850 ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தை இன்றிலிருந்து இரத்துச் செய்து அழித்து நீக்குகின்றேன் என்று இத்தால் அறியத்தருகின்றேன்.

ஏ.எஸ்.எம். சரூக்.

2017, மே 30.

6-481

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹொரணை, பெல்லபிடிய, கிரிதெனியவில் 311 எச் இலக்கத்தில் தங்கியுள்ள அத்துகோரலகே பிரியங்கா குமுதினி ஆகிய நான், எம்.டீ.எஸ். விஜேசிங்க என்ற பிரசித்த நொத்தாரிசு அவர்களினால் 2016.09.15 ஆம் திகதியன்று எழுதி உறுதிப்படுத்திக்கொண்ட இலக்கம் 31 இல் அமைந்த அற்றோணித்தத்துப்பத்திரத்தின் ஊடாக அத்துகோரலகே மஹேஸ் சந்தன அத்துகோரல என்பவருக்கு கையளிக்கப்பட்டிருந்த அற்றோணி அதிகாரத்தை 2017.05.17 ஆம் திகதி முதல் இரத்துச் செய்து கொள்கிறேன் என்பதை, அனைவரதும் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். மேற்படி அற்றோணிப்பத் திரத்திற்கமைய இனிவரும் காலங்களில் என்னால் பொறுப்புக் கூறப்பட மாட்டாதெனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6-511

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 485, சமன் நிவச, 28 ஆம் கட்டை, பொலன்னறுவை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு எனும் முகவரியில் வசிக்கும், தேசிய அடையாள அட்டை இல. 302100900 V ஐ உடைய ஆனந்தகே சோமரத்ன ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு அபருக்க கமகே சுபானி சிவன்திகா சாமலி குணசேன என்பவரால் 2016.05.12ஆம் திகதி எழுதி தயாரிக்கப்பட்ட 104 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தின் மூலம் விவேகா ரெஸ்ரூரன்ட், 28 ஆம் கட்டை, பொலன்னறுவையில் வசிக்கும் இளைய புதல்வரான தேசிய அடையாள அட்டை இல. 732201610V ஐ உடைய ஆனந்தகே சந்தன சமன் கபில என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து செல்லுபடியற்றதாக்குகின்றேன் எனவும் சொல்லப்பட்ட அற்றோணித்தத்துவதாரரினால் செய்யப்பட்ட எந்த கொடுக்கல் வாங்கல்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் மற்றும் சொத்துக்கள் வாகனங்கள் தொடர்பான எந்தவகையான செயற்பாடுகளுக்கும் இதன் பின்னர் என்னால் பொறுப்புக் கூறப்படமாட்டாது எனவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஆனந்தகே சோமரத்ன,
அற்றோணி உரிமையாளர்.

6-533

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, மல்லாவி, யோகபுரம், பூகலேந்தி நகர், பிரிவு 01, இல. 205 என்ற முகவரியைச் சேர்ந்த இந்திராதேவி கிருஷ்ணசர்மா ஆகிய நான், மன்றாடியாரும் பிரசித்த நொத்தாரிசுமான திரு. போல் மார்ஸ் அவர்களால் அவுஸ்திரேலியாவில் அத்தாட்சிப்படுத்திய 2013, யூன் 18 ஆம் திகதியுடைய மற்றும் பகுதி 72, இருமடி 38 மற்றும் பதிவு இல. 2786 இல் முறையாக பதியப்பட்டுள்ள, மேலும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பருத்தித்துறை, கற்கோவலம், பாடசாலை ஒழுங்கை என்ற முகவரியில் வசிக்கும் கந்தசாமி திருநாவுக்கரசு அவர்களால் எனது விடயங்களில் சட்டத்தரணியாக ஈடுபடுவதற்கு நியமனம் செய்யப்பட்ட வெளிநாட்டு அற்றோணித்தத்துவத்தை இத்தால் நீக்குகின்றேன்/இரத்துச் செய்கின்றேன்.

குறித்த கந்தசாமி திருநாவுக்கரசு அவர்களால் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளுக்கும் நான் கடமைப்பட்டவனில்லை என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

இந்திராதேவி கிருஷ்ணசர்மா.

கொழும்பு,
2017, ஏப்பிறல் 12.

6-572

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, மல்லாவி, யோகபுரம், பூகலேந்தி நகர், பிரிவு 01, இல. 205 என்ற முகவரியைச் சேர்ந்த இந்திராதேவி கிருஷ்ணசர்மா ஆகிய நான், மன்றாடியாரும் பிரசித்த நொத்தாரிசுமான திரு. டி. சற்குணராசா அவர்களால் அத்தாட்சிப்படுத்திய 2013, செத்தெம்பர் 12 ஆம் திகதியுடைய 1092 ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவப் பத்திரத்தை முறையாக பதியப்பட்டுள்ள, மேலும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பருத்தித்துறை, கற்கோவலம், பாடசாலை ஒழுங்கை என்ற முகவரியில் வசிக்கும் கந்தசாமி திருநாவுக்கரசு அவர்களால் எனது விடயங்களில் சட்டத்தரணியாக ஈடுபடுவதற்கு நியமனம் செய்யப்பட்ட வெளிநாட்டு அற்றோணித்தத்துவத்தை இத்தால் நீக்குகின்றேன்/இரத்துச் செய்கின்றேன்.

குறித்த கந்தசாமி திருநாவுக்கரசு அவர்களால் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளுக்கும் நான் கடமைப்பட்டவனில்லை என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

இந்திராதேவி கிருஷ்ணசர்மா.

கொழும்பு,
2017, ஏப்பிறல் 12.

6-573

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

வென்னப்புவ கிழக்கு, தும்மலதெனிய, 'சஜீவனி செவன' என்னும் இடத்தில் வதியும் தே.அ.அ.இல. 766680143 V ஐ உடைய ஜயசூரிய மஹதெல்கே மேரியன் ஷனிகா சஜீவனி பீரிஸ் அல்லது ஜயசூரிய மஹதெல்கே மேரியன் ஷானிகா சஜீவனி பீரிஸ் மற்றும் தே.அ.அ.இல. 713093815V ஐ உடைய வர்ணகுலசூரிய லூட்ஸ் க்ளெரன்ஸ் க்ரோஸ் அல்லது வர்ணகுலசூரிய லூட்ஸ் க்ளேரன்ஸ் குரூஸ் ஆகிய நாங்கள் பொது மக்களுக்கு அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு தெரிவிப்பதாவது வென்னப்புவ,கிழக்கு தும்மலதெனிய, 'சஜீவனி செவன' என்னும் இடத்தில் வதியும் ஜயசூரிய மஹதெல்கே மனுவெல் மாட்டீன் பீரிஸ் என்பவருக்கு அதிகாரம் அளிக்கப்பட் பிலிசியன் பர்னாந்துபுள்ளே பிரசித்த நொத்தாரிசினால் 2005.01.13 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 6014 ஐ உடைய அற்றோணித்தத்துவப் பத்திரத்தினை இன்று தொடக்கம் இரத்துச் செய்து அதிகாரமற்றதாக்குவதாகவும் இன்று தொடக்கம் ஜயசூரிய மஹதெல்கே மனுவெல் மாட்டீன் பீரிஸ் என்பவரினால் எமக்காக மற்றும் எமது பெயரில் மேற்கொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் செல்லுபடியாகாது என இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

ஜயசூரிய மஹதெல்கே மேரியன் ஷனிகா சஜீவனி பீரிஸ் ,
அல்லது
ஜயசூரிய மஹதெல்கே மேரியன் ஷானிகா சஜீவனி பீரிஸ் .

வர்ணகுலசூரிய லூட்ஸ் க்ளெரன்ஸ் க்ரோஸ்
அல்லது
வர்ணகுசூரிய லூட்ஸ் க்ளேரன்ஸ் குரூஸ்

2017, மே 15.

6-575

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஐக்கிய அமெரிக்காவில் வசிப்பவரும் இலங்கைக்கு குறுகிய கால வருகை தந்து தற்போது பாணந்துறை நல்லூருவ காலி வீதி, இல. 110/4 யில் தங்கியிருக்கும் விதானராலலாகே நிஹால் சுஆரிஸ் (தேசிய அடையாள அட்டை இல. 543562440V கடவுச்சீட்டு இல. N 3480337) ஆகிய நான் , 2000.12.16 ஆம் திகதியிடப்பட்டு தெல்கந்த பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் 218 ஆம் புத்தகத்தில் 173 ஆம் பக்கத்திலும் தினசரிப்புத்தக இல. 1114 இலும் பதிவுசெய்யப்பட்டு பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு சாந்த லால் வீரசேகர அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்திய 4535 ஆம் இலக்க அற்றோணித்தத்துவ ஆவணம் மூலம் பயாகல நாகஹதுடுவ இஹேலவடுகொட யாபல் எஸ்டேட் என்னும் இடத்தில் வதியும் விதானராலலாகே காமினி சுஆரிஸ் ( தேசிய அடையாள அட்டை இல. 521360089V ) அவர்களுக்கு என்னால் எனது சட்டரீதியான அற்றோணித்தத்துவகாரராக நியமிக்கப்பட்டதை ரத்துச் செய்து செல்லுபடியற்றதாக்குகின்றேன் என இலங்கைச் சனநாயக

சோசலிசக் குடியரசிற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் வெளிப்படுத்தி அறிவிக்கின்றேன். மேலும் இதன்பின் மேற்குறிப்பிட்ட எனது அற்றோணியால் குறித்த அற்றோணி தத்துவத்தின் கீழ் புரியும் செயல்கள் செல்லுபடியாகாது எனவும் இக் குறித்த அற்றோணித்தத்துவம் 2017, மே மாதம் 31 ஆம் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விதானராலலாகே நிஹால் சுஆரிஸ்.

2017, மே 31.

6-647

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

கல்கிஸ்ஸை, ஹீலுதாகொட பாதை, இலக்கம் 60/2 இல் வசிக்கும் முஹம்மது சஹ்மி முஹம்மது அப்துல் காதர் ( தே.அ.அ.இல. 582643474 V) ஆகிய நான் , பிரசித்த நொத்தாரிசு ஜனபிரித் எஸ். பிரனாந்து என்பவரால் 2015.02.19 ஆம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 757 ஆம் இலக்க அற்றோணி அதிகாரப் பத்திரத்தால் தெஹிவளை, கலுபோவிலை, வைத்தியசாலை பாதை, இலக்கம் 167/ 28 இல் வசிக்கும் பாதிமா சிஹானா காதர் (தே.அ.அ.இல. 697400664V) என்பவருக்கு வழங்கிய அற்றோணி அதிகாரப் பத்திரத்தை உடனடியாக அமுலாகும்படி இரத்துச் செய்வதாகவும் மேற்குறிப்பிட்ட திகதியிலிருந்து குறிப்பிட்ட பாதிமா சிஹானா காதர் என்பவர் என் சார்பில் செய்யப்படும் எந்த கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகக்கும் தனக்கும் எந்தப் பொறுப்பும் இல்லை எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

முஹம்மது சஹ்மி முஹம்மது
அப்துல் காதர்.

2017, யூன் 01.

6-651

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

அம்பாந்தோட்டை, சிறிபோபுர, சுசி இல. K- 29 ஐச் சேர்ந்த பாத்திமா ராஷிதா பர்வின் ஆகிய நான், அம்பாந்தோட்டையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ்.எம். ரிஷாம் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.09.13 ஆம் திகதியுடையதும், என்னால் கதிர்காமம், ரஜமாவத்தை, கந்ததிரிந்துகம, இல. 13 ஐச் சேர்ந்த வாசலகே நிலங்க என்பவருக்கு வழங்கப்பட்டதுமான இல. 262 ஐக் கொண்ட விஷேட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்து கொள்கின்றேன் என இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கின்றேன்.

அத்தோடு மேற்குறிப்பிட்ட இல்லாதொழிப்பு 2017, யூன் மாதம் 04ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகுமென்பதையும் அத்திகதியிலிருந்து அவருடைய செயல்களுக்கும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் நான் கட்டுப்பட்டவரும் பொறுப்பாளியுமல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாத்திமா ராஷிதா பர்வின்.

2017, யூன் 4.

6-692

---

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் மற்றும் 11 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

டீ.எஸ். பிளாஸ்ரிக்
கணக்கு இல. 001511000 0380

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிவங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2015.10.29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2015.05.06 ஆந்திகதி இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2014.04.20 ஆந் திகதி திவயின ( Divaina), ஜலண்ட் (Island), தினக்குரல் ( Thinakkural) ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல் களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு கோடியே பதினைந்து இலட்சத்து ஐம்பதினாயிரத்து தொளாயிரத்து நான்கு ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 2,15,50,904.26) 2015, ஒற்றோபர் 07 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் வரை இரண்டு கோடியே இரண்டு இலட்சம் ரூபா (ரூ. 2,02,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஒன்பது தசம் ஐந்து வீதம் (9.5%) மேலும் ஆறு இலட்சத்து பதினெட்டாயிரம் (ரூ. 6,18,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஒன்பது தசம் ஐந்து வீதம் (9.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு, பிணையாக வைக்கப்பட்டுள்ள , இங்கு கீழ் அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான சொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்கள் மூலமாக 2017.08.15 ஆந்திகதி மு.ப. 11.00 மணிக்கு

அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துரை தொட்டமுனே பாணந்துறை தல்பிட்டி தெபெத்தையில் பாணந்துறை நகர சபை எல்லைகளுக்குள் பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் வலான 679 கிராம அலுவலர் பிரிவுக்குள் ஸ்ரீ ராஹால் மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 19 ஐ ஏற்ற வலானையில் அமைந்த ''புளுகஹாவத்த எனும் குளுகாஹாவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். காமினி டி பீரிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, சனவரி 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 2104 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் S என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இல. 5971 எனும் வரைபடத்தின் லொட்கள் 1 மற்றும் 2 ; கிழக்கு : ஸ்ரீ ராஹால் மாவத்தை ; தெற்கு : இல 1674 எனும் வரைபடத்தின் $8^{A}8^{B}$ எனும் பகுதிகள் மற்றும் இல. 5971 எனும் வரைபடத்தின் லொட் 06 மற்றும் ; மேற்கு : இல5971 எனும் வரைபடத்தின் லொட் 06 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் ஒரு பேர்ச் (0ஏ. 1றூ. 1பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2104 எனும் வரைபடத்திற்கு அமைவாக பாணந்துறை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 96/83 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

6- 633/1

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

பிரைட் கன்ஸ்ட்டிக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்
கணக்கு இல. 00361000 8509

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிவங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2017.03.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2015.05.19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் (Gazette) 2017.05.05 ஆந் திகதிய திவயின (Divaina), ஐலண்ட் (Island), தினக்குரல் ( Thinakkural) ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல் களுக்கிணங்க நிலுவை முதலான ஆறு கோடியே பதின்மூன்று இலட்சத்து பதினெட்டாயிரத்து எழுபத்து மூன்று ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 6,13,18,073.79) 2017, மாச்சு 16 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் வரை ஆறு கோடி ரூபா (ரூ. 6,00,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்து தசம் ஐந்து வீதம் (10.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு, பிணையாக வைக்கப்பட்டுள்ள , இங்கு கீழ் அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான சொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்கள் மூலமாக 2017.08.03 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்துவின் சல்பிட்டி கோறளை கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவின், வெள்ளவத்தை கிராம அலுவலர் பிரிவிற்குள் வெள்ளவததை வடக்கு லொட் இல. 43 இல் அமைந்த ஃபிரெட்ரிக்கா வீதியினூடாக ஃபிரெட்ரிக்கா வீதி, வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 27 மற்றும் 27 - 1/1 ஐ ஏற்ற "அம்பகா ஹாவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. பரராசசேக்கரம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, யூலை 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 2119 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 6815 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : லொட் 13 மற்றும் 14 (குரே விளையாட்டு மைதானம்) ; கிழக்கு : ஃபிரட்ரிக்கா வீதி, வரிமதிப்பீட்டு இல. 29 ஐ ஏற்ற வளவுகளான வரைப்பட இல. 1046 இன் லொட் N3 ; தெற்கு : ஃபிரிட்ரிக்கா வீதி மற்றும் மேற்கு: வரைப்பட இல. 1046 இன் லொட் N1 ஆகிய எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்திரண்டு தசம் ஒன்று நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 22.14பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட வரைபட இல. 2119 இற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் SPE 89/ 104 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். சீ. தசநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1950, நவெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 1046 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் N6 எனக் குறிப்பிடப்பட்ட வீதிக்கான ஒதுக்கத்தின் ஊடாகவும் அதன்மீதும் பிரவேசிப்பதற்கான மற்றும் ஏனைய அது தொடர்பான உரிமைகளுடன் அனைத்து மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

6- 633/2

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

ஜே. ஜீ. மெய்யப்பன்
கணக்கு இல.: 1075 5708 1680

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2017.03.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2017.05.19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் (Gazette) 2017.05.05 ஆந் திகதி திவயின (Divaina), ஐலண்ட் (Island), தினக்குரல் ( Thinakkural) ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே பத்து இலட்சத்து பதின்மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தெட்டு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூபா 1,10,13,558.57) 2017, மாச்சு 18 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே நான்கு இலட்சத்து ஐம்பத்தி மூவாயிரத்து தொளாயிரத்து இரண்டு ரூபா எழுபத்தி ஏழு சதம் (ரூபா 1,04,53,902.77) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு தசம் ஐந்து வீதம் (12.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு, பிணையாக வைக்கப்பட்டுள்ள , இங்கு கீழ் அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான சொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்கள் மூலமாக 2017.08.02 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குறு கோறளை, ராகம் பத்துவில் ஜா-எல பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் 310 - திப்பொட்டுவ அலுத்குரு கோரளை தாசிய பத்துவில் மினுவன்கொடை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மஹவத்தை கிராம அலுவலர் பிரிவிற்குள் (G.N. Dov No. 205 B) கொட்டுகொடை, ஏக்கல குருந்துவத்த, 5 ஆவது ஒழுங்கையில் அமைந்த மில்லேனியம் சிட்டி வரிமதிப்பீட்டு இல. 94 ஐ ஏற்ற "ஓரீஎஸ் இடம" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். ஜயபால என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, யூன் 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 1569 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : வரைபட இல. 1971 இன் லொட் R78 (வடிகால் மற்றும் ஏனைய சேவைகள்) ; கிழக்கு : வரைபட இல. 1971 இன் லொட் 78 ; தெற்கு : 1998, திசெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1712 இன் லொட் 4 மற்றும் ; மேற்கு : இல. 1971 இன் லொட் 80, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் ஐந்து ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 10.56பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட வரைபட இல. 1674 இற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட இல. 1569 இல் காட்டப்பட்ட கூறப்பட்ட லொட் 1 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

